**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 03 ஆம் நாள் திங்கட்கிழமை
**இ.ம.எண்.08/2024 இன் அ.வ.எண்.33/2013**

1) பார்வதி (இறந்தார்)
2) சாந்தகுமாரி
3) முத்துக்குமார் (இறந்தார்/விடுவிக்கப்பட்டார்) ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) ராஜமாணிக்கம் (இறந்தார்)
2) லட்சுமி (இறந்தார்)
3) R.சுந்தரம் (இறந்தார்)
4) R.மோகன்ராஜ்
5) R.செந்தில்குமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது, கடந்த 24.02.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, 2–ம் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 3 மனுதாரர்கள்/வாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## ஆணையுரை

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், 2–ம் மனுதாரர்/வாதியின் கணவரின் சாட்சியத்தை கோப்பிலிருந்து அகற்றி, 2–ம் மனுதாரர்/வாதியை சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18, விதி 3(a) மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** 2–ம் மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் வாதி ஆவார். அசல் வழக்கானது சுவாதீனப் பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1–ம் மனுதாரர்/வாதி பார்வதி, அசல் வழக்கில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யத் தவறியதால் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டனர். 2–ம் மனுதாரர்/வாதியின் தாயாரான 1–ம் மனுதாரர்/வாதி/வா.சா.1 காலமாகிவிட்டார். நீண்ட நாட்களுக்கு பிறகு, ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. 2–ம் மனுதாரருக்கு வயதாகிவிட்ட காரணத்தாலும், உடல்நிலை சரியில்லாமல் இருந்ததாலும், மனுதாரரின் கணவர் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் மனுதாரரின் தாயார் வழக்கு சொத்து குறித்து ஏற்படுத்தி வைத்த உயிலை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மனுதாரருக்கு உள்ளது. 2–ம் மனுதாரர்/வாதியின் உரிமையை நிரூபிக்க, அவரது சார்பாக அவரின் கணவர் வா.சா.2 ஆக சாட்சியாக விசாரிக்கப்பட்டாரே தவிர, மூன்றாம் நபராக விசாரிக்கப்படவில்லை. உயிலானது, மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க தேவையான ஒன்றாகும். மனுதாரர் வேண்டுமென்று சாட்சிய விசாரணைக்கு வராமல் இருக்கவில்லை. எனவே, மனுதாரரை சாட்சியாக விசாரிக்க அனுமதி அளிக்க வேண்டி 2–ம் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.2)** மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டப்படி நிலைக்கத்தக்கதும் அல்ல. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஒப்புக்கொண்டவைகளை தவிர, மற்றவற்றை மனுதாரர்/வாதியே நிரூபிக்க வேண்டும். ஏற்கனவே, 2–ம் மனுதாரர்/வாதி தரப்பில், மூன்றாம் நபரான அவரது கணவர் சிங்காரவேலு வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டார். மூன்றாம் நபரை சாட்சியாக விசாரிக்கும் முன், மனுதாரர் தன்னை சாட்சியாக விசாரிக்க நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். வா.சா.2 சாட்சியம் முடிவுற்ற பிறகு மனுதாரர்/2 ம் வாதியை சாட்சியாக விசாரிக்கமுடியாது என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) <u>பிரச்சனை</u>

இம்மனுவானது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், 2–ம் மனுதாரர்/வாதியின் கணவரின் சாட்சியத்தை கோப்பிலிருந்து அகற்றி, 2–ம் மனுதாரர்/வாதியை சாட்சியாக விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையில் நடைமுறைச்சட்டம் கட்டளை 18, விதி 3(a) மற்றும் பிரிவு 151–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2) மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் வாதியாவார். அசல் வழக்கானது சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் இழப்பீடு கோரி மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டது. 2 மற்றும் 3 மனுதாரர்கள், 1–ம் மனுதாரரின் மகள் மற்றும் மகன் ஆவர். அசல் வழக்கில் இறந்துவிட்ட 1–ம் மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் செய்யாமல், மேற்கண்ட சாட்சியிடம் எவ்வித குறுக்கு விசாரணையும் செய்யாமல் இருந்ததால், கடந்த 07.04.2021 அன்று 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பிறகு 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் உரிய மனு தாக்கல் செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிரான ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

5.3) இதற்கு இடையில், வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்ட 1–ம் மனுதாரர்/வாதி இறந்துவிட்டார். பிறகு மனுதாரர்கள் தரப்பில் 2–ம் மனுதாரரின் கணவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்துவந்தது. இந்நிலையில், 2–ம் மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.2–ன் சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என இ.ம.எண் 6/2024 தாக்கல் செய்யப்பட்டது. இ.ம. எண் 6/2024 மனுவிற்கு எதிருரை எதுவும் இல்லை என்று 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேலொப்பம் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பு

கேட்கப்பட்டு, மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு, வா.சா.2–ன் சாட்சியத்தை அகற்றி (Scraped) உத்தரவிடப்பட்டது.

**5.4)** தனது தாயாரான 1–ம் மனுதாரர்/வாதி வழக்கு சொத்து குறித்து தனது பெயரில் உயில் எழுதிவைத்துள்ளதாகவும், அவர் இறந்தபிறகு உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், மேற்கண்ட உயில் குறித்து அதன் பயனாளியான மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்க வேண்டும் என்றும், உயில் ஆவணத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மனுதாரருக்கு உள்ளது என்றும், எனவே, இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க மனுதாரரை அனுமதிக்க வேண்டும் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.5)** இது போன்ற மனுவில் சென்னை உயர்நீதிமன்றம் *Ravi vs Ramar on 11 October, 2007 in CRP PD (MD)No.508 of 2004,* வழக்கில் நிறுவியுள்ள சட்டநெறி பின்வருமாறு:–

*"20.Keeping in view the principle that procedural rules are normally considered as directory unlessthe consequence of not following the procedure is specifically indicated, it would be appropriate to hold that the Court can give permission to the party to examine himself at a later stage even if no such permission had been sought for at the very threshold. As a matter of fact, save and except in one or two decisions of the single Judges of the Madras High Court, most of the High Courts, including many of the Judges of Madras High Court, have preferred to follow a more liberal path of laying down the proposition that even where such permission has not been sought for at the threshold, such permission can be granted for relevant reasons at a later stage. This is not to suggest that as and when such petition is filed the Court is bound to grant such permission merely for the asking. Obviously, the Court is required to consider the matter in its proper perspective and is required to find out as to why the party could not examine himself at the beginning and also as to why the application for seeking such permission was not filed at the threshold. If the Court finds that the party deliberately held himself back with a view to fill-up the lacunae in the evidence at a later stage, obviously such permission is to be refused irrespective of the fact whether permission is sought for at the threshold or at a later stage. If convinced on such aspects, the Court may permit the party to examine himself as a witness at a later stage. What is important is recording of reasons and*

*obviously it means reasons which are germane to the matter, that is to say, relevant for the purpose."*

மேற்கண்ட வழக்கில் நிறுவியுள்ள சட்டவிதிகளின்படி வழக்கின் தரப்பினர்கள் சாட்சியாக விசாரிப்பதற்கு முன்பு, சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பின்னிட்டு தரப்பினர்கள் சாட்சியம் அளிக்க விரும்பினால், அத்தகைய அனுமதியை நீதிமன்றம் வழங்கலாம் என்றும், எனினும், உரிய போதுமான காரணங்களின் அடிப்படையிலேயே அந்த அனுமதி வழங்கப்படவேண்டும் என்றும், தரப்பினர்களின் வழக்கில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் விதமாக அனுமதி வழங்கக்கூடாது என்பதாகும்.

**5.6)** இவ்வழக்கில், இறந்துவிட்ட 1-ம் மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட நிலையில், குறுக்கு விசாரணைக்கு முன்பே அவர் இறந்துவிட்டார். பின்னிட்டு, மனுதாரர்கள் தரப்பில் 2-ம் மனுதாரர்/வாதியின் கணவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டார். எனினும், இறந்துவிட்ட 1-ம் எதிர்மனுதாரர்/வாதி, 2-ம் மனுதாரர்/வாதி சார்பாக எழுதிவைத்த உயிலை 2-ம் மனுதாரர்/வாதி சாட்சியம் அளித்து நிரூபிக்க வேண்டும் என்றும், எனவே, வா.சா.2-ன் சாட்சியத்தை நீக்க வேண்டும் என்று, 2-ம் மனுதாரர்/வாதி தாக்கல் செய்த இ.ம.எண் 6/2024-ற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என்று, அதவாது ஆட்சேபணை எதுவும் இல்லை என்று மேலொப்பம் செய்ததால் மேற்கண்ட மனு அனுமதிக்கப்பட்டு, வா.சா.2-ன் சாட்சியம் நீக்கப்பட்டுள்ளது. உண்மையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சியம் எதுவும் தற்போதுவரை அளிக்கப்படாத நிலையே உள்ளது. எனவே, இம்மனுவை அனுமதித்தால் மனுதாரர்கள் வழக்கில் காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் விதத்தில் அமையும் என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை.

**5.7)** இவ்வழக்கை பொறுத்தவரை, இந்நீதிமன்றமே முதற்கட்ட விசாரணை நீதிமன்றம் ஆகும். தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் தனது கணவர் தனது சார்பாக வா.சா.2 ஆக சாட்சியம் அளித்ததாக மனுதாரர்

காரணம் கூறியுள்ளார். வா.சா.2–ன் சாட்சியமும் கோப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது (Scraped). 1–ம் மனுதாரர்/வாதி வழக்கு சொத்து குறித்து 2–ம் மனுதாரர்/வாதி பெயரில் எழுதிய உயிலை நிரூபிக்கவேண்டிய சுமை மனுதாரருக்கு உள்ளது. எனவே, நீதியின் நலன்பொருட்டு இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு அனுமதிக்கப்பட்டு, 2–ம் மனுதாரர்/வாதி அசல் வழக்கில் தன்னை சாட்சியாக விசாரிப்பதற்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 03 ஆம் நாளான இன்று, என்னால் அவையறிய பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை. –

**<u>எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை. –

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**
இ.ம.எண்.8/2024 இன் அ.வ.எண்.33/2013
நாள் : 03.03.2025
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
பொள்ளாச்சி

---